1994 மே 4]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 510, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

510—

தமிழ்நாட்டிலிருந்து மலர்களை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல்.

*23312—திருமதி கே. மரியம் உல் ஆசியா:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூக்கள் தமிழ்நாட்டிலிருந்து வியாபார ரீதியில் வேறு மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறதா?

(ஆ) வேறு நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்;

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) பூக்கள் தமிழ்நாட்டிலிருந்து வியாபார ரீதியில் பெங்களூர், நாசிக் மற்றும் பம்பாய் ஆகிய நகரங்களுக்கு தினந்தோறும் அனுப்பப்படுகின்றது.

(ஆ) மற்றும் (இ): தமிழ்நாட்டிலிருந்து நேரடியாக வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவில்லை, என்றாலும் பெங்களூர், நாசிக் மற்றும் பம்பாய் போன்ற நகரங்களிலிருந்து மறுபடியும் வேறு சிப்பமிட்டு, அரபு நாடுகள் போன்ற வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. தமிழகத்திலே நம்முடைய மதுராந்தகத்திலேயிருந்து ஒரு நண்பர் வெளிநாடுகளுக்கு நேரடியாக பூக்களை ஏற்றுமதி செய்து வருகிறார், என்ற செய்தி தற்போது கிடைத்துள்ளது.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த வகைப் பூக்கள் வெளி மாநிலங்களுக்கும் மற்றும் அரபு நாடுகளுக்கும் அனுப்பப்படுகின்றன? பூக்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு வருமானம் எவ்வளவு கிடைக்கின்றது? நேரடியாக வெளிநாடுகளுக்கு அனுப்ப முடியவில்லை என்றாலும், இதன்மூலம் அன்னியச் செலாவாணி

அதாவது மற்ற மாநிலங்களிலிருந்து அனுப்பப்படுகின்ற பூக்களின் மூலமாக நமது நாட்டுக்கு அன்னியச் செலாவணி கிடைக்கிறதா என்பதைப் பற்றியும், மேலும் மல்லிகை, ரோஜா, சாமந்தி போன்ற பூக்களிலிருந்து சென்ட், வாசனைப் பவுடர், சோப் முதலியவை தயாரிக்கப்படுவதால், அவற்றுக்கு வெளி நாடுகளில் கிராக்கி அதிகமாக இருக்கிறது. அதன் காரணமாகவும், இங்கே மலர்களின் வளர்ச்சிக்கு ஆராய்ச்சி மையம் ஒன்றை அமைப்பதற்கும், தொழில் கூடம் அமைப்பதற்கும் அரசு ஆவன செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மற்றும் மதுரையிலிருந்து தினந்தோறும் 3 டன் மல்லிகை மற்றும் கனகாம்பரம், ஆகிய பூக்கள் பம்பாய் நகரத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து தென் இந்திய மக்கள் அதிகமாக வாழும் அரபு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதிலே அன்னியச் செலாவணி வருகிறது. அது தனியாருக்குப் போகிறது. அரசுக் கணக்கிலே வராது. அதைப்போல, சௌத் இந்தியா விஸ்கோஸ் மற்றும் ஸ்பிக் ஆகிய இரண்டு நிறுவனங்களும் 'திசு கல்ச்சர்' முறை மூலம் மலர்ச் செடிகளை உருவாக்கி, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றன. இதில் கால்டன் மற்றும் ரோஸ் செடிகள் அடங்கும்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பூக்கள் மற்றும் காய்கனிகள் ஆகியவை அறுவடைக்குப்பின், உலர்ந்து பூஞ்சக்காளான்களால் தாக்கப்பட்டு, அழுகி பயனற்றவைகளாக ஆகிவிடுகின்றன. அவற்றின் தரமும் பாதிக்கப்பட்டு, பொருளாதார விரயமும் ஏற்படுகின்றது. ஆகவே, அதைப் பாதுகாக்க தொலை நோக்குத் திட்டம் ஏதாவது அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூக்கள் மற்றும் பழங்கள் ஆகிய இரண்டையும் மட்டுமே அறுவடைக்குப் பின்னால், அதைச் சேமித்து வைத்து ஏற்றுமதிக்குரிய தரம் வாய்ந்த பொருட்களாக உருவாக்கி, ஏற்றுமதியைப் பெருக்குகின்ற வகையிலே, நம்முடைய இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள், இவ்வாண்டு தமிழகத்திலே 3 குளிரூட்டப்பட்ட கிட்டங்கிகளை, பாதுகாப்பு அறைகளைக் கட்டுவதற்கு 3 கோடி ரூபாயை வழங்கியிருக்கிறார்கள். அதிலே ஒரு கோடி செலவிலே ஒன்று வேடசந்தூர் பகுதியிலே அமைய இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்

1994 மே 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூக்களிலே முல்லை, மல்லிகை, தாழம்பூ என்று சொல்கிறார்கள். இன்னும் பல்வேறு வகையான பூக்கள் இருக்கின்றன. பூக்களிலே சிறந்த பூ எது? அதுவும் புதிதாக திருமணம் ஆன இளம் மணமக்களுக்கு எந்தப் பூ பிடிக்கும் என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதெல்லாம் அனுபவ ரீதியில் போய்த் தெரிந்துகொள்ளுங்கள். (சிரிப்பு):

வினா எண். 511, திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்,

511—

சின்னசேலத்தில் காளான் வளர்ப்புப் பண்ணை அமைத்தல்.

*24247—திரு. ஆர். பி. பரமசிவம்:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், சின்னசேலத்தில் வேளாண்மைத் துறை மூலம் காளான் வளர்ப்புப் பண்ணை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எனவே, துணைக் கேள்விக்குப் பதில் இல்லை.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை மாநிலத்தில் எந்த ஒரு இடத்திலேயும் காளான் வளர்க்கின்ற பண்ணை இப்போது இல்லை. வளர்ந்துவரும் தொழிலாக இருக்கின்ற இந்தக் காளான் வளர்ப்பு, இதனைப் பயன்படுத்துவதற்கு உதவியாக அரசு மூலம் மாதிரிப் பண்ணை ஏற்படுத்த அரசு மீண்டும் மறுபரிசீலனை செய்யுமா? அத்துடன் புதிய மாவட்டமான எங்களுடைய விழுப்புரம் மாவட்டத்தில் இதை ஏற்படுத்த முன்வருமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS